(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 182.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2017 யூலை 26 புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

976/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வடமேல் மாகாணத்தின் சிலாபம், இரணவில பிரதேசத்தில் "அமெரிக்காவின் குரல்" (Voice of America) என ஒலிபரப்பு நிலையமொன்று உள்ளதா;

(ii) ஆமெனில், அதற்காக வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது;

(iii) மேற்படி காணி வழங்கப்பட்டுள்ளது இறையிலி அடிப்படையிலா இன்றேல் குத்தகை அடிப்படையிலா;

(iv) குத்தகை அடிப்படையிலாயின், இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்தியுள்ள குத்தகைத் தொகை ஒவ்வொரு வருடத்திற்கிணங்க வெவ்வேறாக யாது;

(v) இந்த நிலப்பரப்பில் இலங்கை அரசாங்கத்தின் அனைத்துச் சட்டதிட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) "அமெரிக்காவின் குரல்" நிறுவனத்தை ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் அல்லது "Voice of America" நிறுவனத்துடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைகள் யாவை;

(ii) மேற்படி உடன்படிக்கைகள் அனைத்தையும் சபையில் சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்படி நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(iv) அந்நிறுவனத்தினால் ஆற்றப்படுகின்ற வேலைகள் மற்றும் ஒலிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகள் யாவை;

(v) மேற்படி வேலைகள் மற்றும் நிகழ்ச்சிகளை ஒழுங்குமுறையாக்குகின்ற இலங்கை அரச நிறுவனம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1044/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிங்கள ஒலி ஊட்டப்பட்ட "ராவணா லங்கேஷ்வர" எனும் இந்திய தொலைக்காட்சி நாடகமொன்று சுயாதீன தொலைக்காட்சி அலை வரிசையில் ஒளிபரப்பப்பட்டதென்பதையும்;

(ii) 2016 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் திடீரென இத்தொலைக்காட்சி நாடகத்தின் ஒளிபரப்பு இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இத்தொலைக்காட்சி நாடகத்தின் ஒளிபரப்பை திடீரென நிறுத்துவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் யாவை;

(ii) அதன் ஒளிபரப்பை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1050/ '16

கௌரவ புத்திக்க பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு மாநகரசபை ஆளுகை பிரதேசத்தில் உள்ள அரசாங்க கட்டிடங்களில் பேணிவரப்படுகின்ற அமைச்சுக்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வமைச்சுக்கள் பேணிவரப்படும் அரசாங்க கட்டிடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அமைச்சுக்களில் குத்தகைக் கூலி செலுத்தும் மற்றும் செலுத்தாத அமைச்சுக்கள், ஒவ்வொரு கட்டிடத்திற்கு அமைவாக தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) குத்தகை செலுத்தும் அமைச்சுக்கள், ஒரு சதுர அடிக்கு செலுத்தும் குத்தகைக் கூலி மற்றும் சேவை கட்டணம், ஒவ்வொரு கட்டிடத்திற்கு அமைவாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(v) இக்கட்டிடங்களில் வாகனங்களை நிறுத்திவைப்பதற்காக உள்ள இடப்பரப்புக்கு கொடுப்பனவுகள் செய்யப்படுகின்றதா என்பதையும்;

(vi) ஆமெனின், இத்தொகை யாதென்பதையும்;

(vii) வாகனங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் மேற்படி கொடுப்பனவு முறையியல் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1114/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை பதுளை மாவட்டத்தினுள் எரிபொருள் ஏற்றிச்செல்வதற்காக வழங்கப்பட்டுள்ள, எரிபொருள் பௌசர் உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டு ரீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) எரிபொருள் பௌசர் உரிமப்பத்திரங்களை பெற்றுக் கொண்டுள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஒவ்வொரு ஆண்டு ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) இதன் ஊடாக கூட்டுத்தாபனம் ஈட்டிக்கொண்டுள்ள மொத்தப் பணத் தொகை ஒவ்வொரு ஆண்டின்படி தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) வீதி விபத்துகள், வாகன நெரிசல் மற்றும் சுற்றாடல் மாசடைதல் ஆகிய விடயங்களை குறைப்பதற்காக எரிபொருள் ஏற்றிச்செல்லலை புகையிரதங்களின் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1154/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்துகம கல்வி வலயத்துக்குரிய மே.மா/ம/வலகெதர மகா வித்தியாலயம் 2012 ஆம் ஆண்டில் இரண்டாம் நிலை பாடசாலை கருத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட போதிலும் அப் பாடசாலைக்கு தொழில்நுட்பவியல் கூடமொன்று மாத்திரமே கிடைத்துள்ளதென்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டில் அப் பாடசாலை "அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை" கருத்திட்டத்தின் 'சீ' வகுதிக்குள் உள்ளடக்கப்பட்ட போதிலும், அதன் கீழ் புதிதாக எந்தவொரு வகுப்பறை கட்டடமும் வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) கடந்த 15 ஆண்டுகளாக இப் பாடசாலைக்கு போதியளவு பௌதீக வளங்கள் கிடைக்கவில்லை என்பதையும்;

(iv) பாடசாலையில் சங்கீதம், விஞ்ஞானம், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி, ஆலோசனை ஆகிய பாடங்களையும் 6 - 9 ஆம் தரங்களுக்கு தமிழ் மொழியையும் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) சுமார் 1200 மாணவர்கள் கல்வி கற்கின்ற இப் பாடசாலைக்கு போதியளவு கட்டட வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1158/ '16

கௌரவ அசோக்க பிரியந்த,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழில் பேட்டைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மேற்படி கைத்தொழில் பேட்டைகளில் இயங்கும் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு கைத்தொழிற்சாலையிலும் பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) எதிர்வரும் காலத்தில் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டைகளில் புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1192/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் மன்னார் மாவட்டத்தில் இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போதைக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 1984 முதல் 2009 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2009 ஆம் ஆண்டில் யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில் மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1301/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நடப்பு அரசாங்கத்தின் “100 நாள்” வேலைத்திட்டத்திற்கு நேரொத்த வகையில் வரவு செலவுத்திட்ட முன்மொழிவாக அரச வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை மீட்டுகின்றபோது அறவிடப்படுகின்ற வட்டித் தொகை வெட்டிவிடப்படுமென வழங்கப்பட்ட வாக்குறுதியின் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தங்க நகைகளை மீட்டியுள்ள மாத்தறை மாவட்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) இதற்கான அரசாங்க நிவாரணத்தின் நிதிப் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையானது மாத்தறை மாவட்டத்தில் இயங்கி வருகின்ற ஒவ்வொரு அரச வங்கியின் பிரகாரம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2013 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை தங்க நகைகளுக்கான வட்டி வீதமானது ஒவ்வொரு வருடத்திற்கேற்ப தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த சனாதிபதித் தேர்தலின்போது விளம்பரத் தொனிப்பொருளாக அமைத்துக் கொள்ளப்பட்ட தங்க நகைகளை அடகுவைத்தல் என்பது வெறுமனே விளம்பரக் கருத்திட்டத்திற்கு அப்பால் செல்லவில்லையென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) வாக்குறுதியளிக்கப்பட்டவாறு அடகு வைக்கப்பட்ட தங்க நகைகளை மீட்டுகின்றபோது வட்டிச் சலுகைகளை உடனடியாகப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1320/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சயிட்டம் (SAITM) எனப்படும் தனியார் மருத்துவ நிறுவகத்திற்கு பொலிசாரினால் ஏதேனும் பிரேதங்கள் மற்றும் பிரேதத்தின் பகுதிகள் வழங்கப்பட்டுள்ளன என்பது இன்றளவில் தெரியவந்துள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறு செயற்படுவதற்கு பொலிசாருக்கு சட்ட அதிகாரம் உள்ளதா என்பதையும்;

(iii) பொலிசாருக்கு அவ்வாறு சட்ட அதிகாரம் இல்லையெனின், அது தொடர்பில் எடுக்கும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1375/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2016 வரவு செலவு திட்டத்தில் 129 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம் அரச மற்றும் தனியார் துறையின் சிறந்த ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக ரூபா 1000 மில்லியன் ஒதுக்கப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) கமத்தொழில் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட மேற்படி ரூபா 1000 மில்லியன் பயன்படுத்தப்பட்ட விதம் யாதென்பதையும்;

(iii) வரவு செலவு திட்ட முன்மொழிவின் ஊடாக ஒதுக்கப்பட்ட மேற்படி ரூபா 1000 மில்லியன் நிதி வளங்களின் பயனாளிகளின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1500/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ் 12-18 வயதுக்கு இடைப்பட்ட முஸ்லிம் சிறுமிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட விவாகப் பதிவுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைய தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1518/ '17

கௌரவ (திருமதி) ரோஹிணீ குமாரி விஜேரத்ன,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உரித்தான மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள பயிர்செய்கைகளைக் கொண்ட காணிகளில், இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கும், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிருவாகம் மற்றும் முகாமைத்துவத்துக்காக வழங்கப்பட்டுள்ள காணிகளில் எவ்வளவு காணிகள் கட்டுப்பாடின்றி தரிசு நிலமாகவும் வயற்காணிகளாகவும் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி காணிகள் அளவை செய்யப்பட்டு இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி காணிகளை பயனுறுதியான விதத்தில் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு தற்போது ஒரு வேலைத்திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி காணிகளை, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு காணிகளை வெளிப்படுத்திய ஆட்களின் சட்டரீதியான கடப்பாடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு மற்றும் விவசாயம் அல்லாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கான இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1546/ '17

கௌரவ விமலவீர திசாநாயக்க,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாறை, கல்முனை வீதி, எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் வசிக்கும் திரு. டபிள்யு.ஜீ. சிறில் பெரேரா மேற்படி முகவரியில் 17 ஆண்டுகள் தொடர்ந்து வசித்து வருகின்றார் என்பதையும்;

(ii) மேற்படி காணிக்கு சட்டரீதியான உரிமையை பெற்றுக்கொள்வதற்காக நீண்டகாலமாக விடுக்கப்பட்டுவந்த கோரிக்கைக்கு அமைவாக அம்பாறை பிரதேச செயலகத்தினால் சுற்றறிக்கை இலக்கம் 2008/4 இற்கு அமைவாக நடத்தப்பட்ட காணிக் கச்சேரியொன்றில் 20 பர்ச்சஸ் காணிப் பகுதியொன்றை இவருக்கு பெற்றுக்கொடுக்க விதந்துரைக்கப்பட்டதென்பதையும்;

(iii) எனினும், மேற்படி காணிப் பகுதியை பல்வேறு காரணங்களை முன்வைத்து பெற்றுக்கொடுக்காமை பற்றி இவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு விளக்கமளித்த பின்னர், இவ்வாணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் இறுதியில் இவர் வசிக்கும் காணியை சட்டரீதியாக இவருக்கு பெற்றுக்கொடுக்க விதந்துரைக்கப்பட்டதென்பதையும்;

(iv) எனினும், இற்றைவரையில் இவருக்கு மேற்படி காணியின் உரிமை பெற்றுக்கொடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திரு. பெரேராவிற்கு ஏற்பட்ட மேற்படி பாதிப்பு மற்றும் அநீதிக்கு நியாயமான நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1577/ '17

கௌரவ எஸ். சிறீதரன்,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் - மன்னார் A-32 வீதி மறுசீரமைக்கப் பட்டதென்பதையும்;

(ii) ஆயினும், அந்த வீதியில் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மண்டைக்கல்லாறு பாலம் மறுசீரமைக்கப்படவில்லை என்பதையும்;

(iii) இந்த பாலத்தின் ஊடாக மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்கு பயணிக்க வேண்டுமென்பதையும்;

(iv) இலுப்பைக்கடவை, முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைகள் தேவைப்படுகின்ற நோயாளிகள் இந்த வீதியின் ஊடாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகையில் பாரிய சிக்கல்கள் தோன்றியுள்ளனவென்பதையும்;

(v) பாலம் சீரழிந்துள்ளமையால் கடந்த மழைக்காலங்களில் இந்த வீதி பயணஞ்செய்ய இயலாதவாறு பல வாரங்கள் தடைப்பட்டிருந்ததென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாலம் நிர்மாணிக்கப்படுவதாக அறிவித்தல் பலகையொன்று பொருத்தப்பட்டு அவசியமான பொருட்கள் அங்கு கொண்வரப்படுள்ள போதிலும் இற்றைவரை மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) மண்டைக்கல்லாறு பாலத்தை மறுசீரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்திற்கு என்ன நேர்ந்தது;

(iii) அந்தப் பணம் மீளத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில் அதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவர்;

(v) இந்த பாலம் மறுசீரமைக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1582/ '17

கௌரவ கனக ஹேரத்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 மே மாதத்தில் நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்திய சீரற்ற காலநிலையின் காரணமாக மண்சரிவுக்குள்ளாகிய மற்றும் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கிய கேகாலை மாவட்டத்திலுள்ள தோட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தோட்டங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அதிக மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவினாலும் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியமையினாலும் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இடம்பெயர்ந்த குடும்பங்கள் குடியிருப்பதற்காக அரசினால் நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், இவர்கள் இப்போது குடியிருக்கின்ற இடங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு அரசினால் வீடுகள் வழங்கி முடிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தம்),— 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச்சு 28 ஆம் திகதிய 2012/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச்சு 28 ஆம் திகதிய 2012/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச்சு 31 ஆம் திகதிய 2012/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மே 08 ஆம் திகதிய 2018/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மே 19 ஆம் திகதிய 2019/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2017.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2017 பெப்ரவரி 16 ஆம் திகதிய 2006/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் பிரிவு 6 (உ) மற்றும் பிரிவு 21 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 51 கீழ் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 திசெம்பர் 06 ஆம் திகதிய 1996/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2017, மார்ச்சு 08) [1].

* 11.

சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

உண்ணாட்டரசிறைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவக சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளில் திருத்தம் மேற்கொள்ளல்,—

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41(ஆ) ஆவது உறுப்புரை மற்றும் 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 3 மற்றும் 3(4) பிரிவுகளின் பிரகாரம், மனித உரிமைகள் துறை சம்பந்தமான பரந்தளவிலான அறிவு மற்றும் செயன்முறை ரீதியிலான அனுபவத்தைக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சட்டத் திணைக்களத்தின் தலைவராக பணியாற்றும் கலாநிதி திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக மூன்று (03) வருட காலத்திற்கு 2015.10.30 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

2015.10.30 ஆம் திகதி முதல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக கடமையாற்றும் கலாநிதி திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்கள் மூன்று (03) வருட சேவைக் காலத்தின் பின்னர் மீண்டும் தனது நிரந்தரப் பதவிக்குச் செல்வதற்கு கருதியிருப்பதுடன், இந்த மூன்று (03) வருட காலப் பகுதியில் சகல படிகளும் உள்ளடங்கலான பல்கலைக்கழகச் சம்பளத்தை அவர் இழந்தால் அவருக்கு கிடைக்க வேண்டிய அனுகூலங்கள் மீது பாதிப்பு ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளாராதலாலும்;

அதற்கமைய, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய தலைவராக கடமையாற்றும் கலாநிதி திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்களுக்கு தனிப்பட்ட வகையில் செல்லுபடியாகும் வகையில் அவர் சேவையாற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சகல படிகளும் உள்ளடங்கிய முழு நேர விரிவுரையாளருக்குரிய சம்பளத்தை 2015.10.30 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கும், ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்குரித்தான ரூபா 10,000/- மாதாந்தத் தொலைபேசிக் கொடுப்பனவு, தனிப்பட்ட பாவனைக்கு உரிமையைக் கொண்ட உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் அந்த வாகனத்திற்கு 225 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தையில் நிலவும் எரிபொருளுக்கான விலைக்குச் சமமான எரிபொருள் கொடுப்பனவைச் செலுத்துவதற்கும் 2017.06.13 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தை வழங்கியுள்ளதாதலாலும்;

அதற்கமைய, 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆவது பிரிவின் பிரகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரான திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்களுக்கு அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்தச் சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்துவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆவது பிரிவின் கீழ், மருத்துவ உபகரணங்கள் விலை குறித்தல் தொடர்பாக சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 பெப்புருவரி 17 ஆம் திகதிய 2006/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 18.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 21.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ், நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மாச்சு 27 ஆம் திகதிய 2012/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

22.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.